**STARTING TIME 10.59 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 118/2025**

Deposition of **D.W.1** witnesses for defendant Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 04.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : உமா லட்சுமி Husband's Name : மோகன் பாபு

Village : கதவு எண். 16/5, புத்தர் தெரு,
சொரக்காபாளையம், ஆவடி, சென்னை–54.

Age : 42

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 1–ம் பிரதிவாதி துரைகண்ணம்மாள் எனது மாமியார் என்றால், சரிதான். எனது மாமனார் பெயர் சிவபிரகாசம் என்றால், சரிதான். மேற்படி இருவரின் மகன் தான் எனது கணவர் மோகன்பாபு என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எனது கணவரின் வாரிசு சான்றான பி.வா.சா.ஆ.4–ல், என் கணவரின் தந்தை பெயர் ராமமூர்த்தி என உள்ளதால், அந்த வாரிசு சான்றே போலியானது என்றால், சரியல்ல, எனது கணவரின் இளம் வயதிலேயே ராமமூர்த்தி என்பவர் என் கணவரை தத்து எடுத்துக் கொண்டார், அதனால் எனது கணவரின் அனைத்து ஆவணங்களிலும் அவரது தந்தை பெயர் ராமமூர்த்தி என்றும், இனிசியல் R– என்றே இருக்கும்.

2. அதுபோல் ராமமூர்த்தி என்பவர் என் கணவரை தத்து எடுத்துக் கொண்டார் என்பதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி விவரத்தை நான் 02.11.2021 அன்று தாக்கல் செய்துள்ள எனது

பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. அதேபோல் அந்த விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்திலாவது சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. போலியாக தயாரித்து வாரிசு சான்றை மறைப்பதற்காக வேண்டியே எனது பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லாத சங்கதிகளை பொறுத்து தற்சமயம் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆவணங்கள் இவ்வழக்கிற்காக வேண்டி தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல.

3. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் சான்று நகலை 01.02.2024 அன்று வாங்கியதாக தான் உள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.1 பாகப் பிரிவினைப் பத்திரத்தில், எனது கணவர் மோகன்பாபு, ராமமூர்த்தி என்பவரது தத்து மகன் என சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை. அதற்கான ஆவணங்களும் அந்த பத்திரத்துடன் இணைத்து பதிவு செய்யப்படவில்லை என்றால், சரிதான்.

4. ராமமூர்த்தி என்பவருக்கு 1, 9, 13 பிரதிவாதிகள் மகள்கள் என்றால், சரிதான். ராமமூர்த்தியின் மகளான 13–ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் 1/3 பாகம் உரிமை உள்ளது என்றால், பி.வா.சா.ஆ.1 பாகப் பிரிவினைப் பத்திரத்தின்படி D அட்டவணையில் உள்ள சொத்துக்கள் அவரது பாக சொத்துக்கள் ஆகும். நான் சொல்வது தவறு என்றும், பி.வா.சா.ஆ.1 பாகப் பிரிவினைப் பத்திரமே எழுதப்படவில்லை என்றும், வாதிக்கு வழக்கில் கோரியவாறு பாகப் பிரிவினை பெற உரிமை உள்ளது என்றால், சரியல்ல.

5. பி.வா.சா.ஆ.1 பாகப் பிரிவினைப் பத்திரத்தில் உள்ளவாறு சொத்துக்களை நான் அனுபவித்து வந்ததில்லை என்றும், அதற்கான ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல, நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையில் திருத்தப்பட்ட தாவா சம்மந்தப்பட்டது அல்லாமல், கூடுதலாக சொல்லியுள்ள விவரங்கள் எதுவும் வாதியை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி, எனது கணவருக்கு சொந்தமான சொத்துக்கள் எங்களுக்கு சொந்தம் என்று, எதிரிடை கோருரிமை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால், சரிதான். என் கணவர் உயிருடன் இருந்த போது போலியாக எழுதப்பட்ட பி.வா.சா.ஆ.1 பாகப் பிரிவினைப் பத்திரத்தில் உள்ளவாறு சொத்துக்களை சுவாதீனம் எடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல, அந்த பாகப் பிரிவினைப் பத்திரத்தில் 2–ம் வாதி சுரேஷ் என்பவர் ஒரு சாட்சியாகவும் கையெழுத்து செய்துள்ளார்.

7. அதுபோல் சொல்வது பொய் என்றும், ராமமூர்த்தியின் சொத்துக்களில் அவரது வாரிசுகள் அனைவருக்கும் பாகம் உள்ளது என்பதால் தான், வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்களை இன்றுவரை வாதிகள் தான் முறையாக பாதுகாத்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், எனவே, வாதிகள் கோரியவாறு வழக்கில் தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிறகு தான் அந்த விவரமே வாதிக்கு தெரிய வந்தது என்றால், சரியல்ல. எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 11.21 A.M.**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.04 11:55:27 +0530